# இந்துசாதனம்.

## THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்"

**பத்திரிகை கிரயம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—ங௭. } யாழ்ப்பாணம்:—அக்ஷயவருஷ வைகாசிமீ உகவ. (1926 ஜூன் 3) வியாழக்கிழமை. { இலக்கம்—கூஉ.


உ
கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பாம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.


## சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து

குளிர் (துலப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. (Y 47)

## HAKEEM K. MOHAMED YOOSOOF,
MUHAMMEDIA MEDICAL HALL,
PORTO-NOVO. S. A. Dt. [India.]

ஓ! நண்பர்காள்!

நமது வைத்தியசாலைக்கு நேரில் வந்து பணத்தைப்பற்றிக் கவனிக்கவேண்டாம். வீரிய விர்த்திக்காக முதற்றரமான லேகியம் வேணுமென்றுகேட்கும் கனவான்களுக்குமட்டும் இதைத் தனியாகச் செய்து கொடுத்துவந்தோம். இப்போது எல்லா ஜனங்களும் இதன் சுகத்தை அடையும்படி இப்பத்திரிகை மூலமாய் வெளிப்படுத்தியிருக்கிறோம்.

உலகத்தில் வெளிவந்திருக்கும் லேகியங்களுக்கெல்லாம் மகுடம்

### இராஜ தத்துவ லேகியம்

இழந்துபோன பலத்தையும் தளர்ந்துபோன நரம்புகளையும் ஒரேவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு இதற்குச் சமமாய் எதைக் காட்ட முடியும்.

இந்த லேகியம் சாப்பிடுகிறவர்கள் இதற்குச் சமமான லேகியம் காட்டுவார்களானுலுஞ்சரி, அல்லது இதிற் சொல்லப்பட்ட குணங்கள் அவ்வளவாக இல்லையென்று [illegible]ப்பார்களானாலுஞ் சரி அவர்களின் பணத்தைத் திரும்பக் கொடுத்துவிடப்படும்.

உத்தரவாதமுள்ள சத்திய அவுஷதம்.

வீரியதத்துவத்தையும் நாடி நரம்பு முதலியவைகளின் உற்சாகத்தையும் கொடுத்துத் தேக காங்கையினால் நீற்றுப்போகும் வீரியத்தையும் 2 வேளை மருந்திற் குணப்படுத்தும்; மூளையைப் பலப்படுத்தி ஞாபகசக்தியைத் தரும்; பற்பல வாய்வுரோகம், இடுப்புவலி, கைகாலசதி, மலச் சிக்கல் இவைகளைச் சுகப்படுத்துவதில் முதற்றரமான மருந்தென்று தங்கள் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

ஒரு ருத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 10—0—0.
அரை ருத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 5—0—0.
கால்ருத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 2—12—0.
வி. பி. செலவு வேறு.

நமக்கு நேரில் ஆர்டர்செய்தால்மட்டில் இந்த லேகியம் கிடைக்கும்; மற்றவரிடம் கிடைக்காது.

விலாசம்: ஹக்கீம் கா. முகம்மதுயூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

(Y. 54.)

### வீடுவேயும் ஓடுகளை நீங்கள் எங்கேவாங்குகிறீர்கள்?

திறமான ஓடுகளைத் தெரிவுசெய்யும்போது
பிரதானமான மூன்று விஷயங்களை
நீங்கள் கவனிக்கவேண்டும்.

முதலாவது பாரமின்மை;
இரண்டாவது நெடுங்கால உபயோகம்;
மூன்றாவது உங்கள் தேச சீதோஷ்ண ஸ்திதி.

எங்கள் ஸ்ராண்டேட் ஓடுகள்

ஸ்ராண்டேட் ஓட்டுக் கொம்பனியாரால் செய்யப்பட்டன;

மேலே சொல்லப்பட்ட மூன்று தன்மைகளும் இவைகளிடத் துள்ளன.

இப்பொழுது உலகத்திலே உண்மையாகத் திறமையான ஓடுகள்.

இவற்றை உபயோகித்தவர்கள்

அதிகமாக வியந்து பேசுகிறார்கள்.

1921-ம் வருடம் நாங்கள் இந்தஓடுகளை விற்கும் உரிமையைப் பெற்றபின் உண்டான அதிக விற்பனையினால் அவற்றின் பிரஸ்தாபம் எங்கெங்கும் பரக்கின்றது.

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்!
பின்வரும் விலாசத்துக்கு எழுதுக:

எஸ். வீரகத்திப்பிள்ளை,
விற்கும் உரிமையுடையவர்,
யாழ்ப்பாணம்.

(H. 47.)

### சிவஞானசித்தியார் சுபக்கம்
மூலமும் பொழிப்புரையும்.

இரண்டாம் பதிப்பு.

முதற்பதிப்பு 360 பக்கந்தான். இப்பதிப்பு 180 பக்கம் அதிகமாகச் சேர்த்து 540 பக்கத்தில் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு முழுக் கலிக்கோ பைண்டு அழகாகச் செய்யப்பெற்றிருக்கிறது. ஒவ்வொரு செய்யுளுக்குள்ள குறிப்புக்களும், அனுமானக் குற்றம் அறுபத்தைந்தும், பாதிவிருத்தமிதுவென்பதும் இனிது விளக்கப்பெற்றிருக்கின்றன. தத்துவப்படம் தாத்துவிகப்படம் அத்துவப்படங்களும், பல அகராதிகளும் உள்ளன. அதிகப் பிரதிகள் அச்சிடவில்லை. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூ 2-8-0.

| | |
|---|---|
| சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம் | 3—8—0 |
| சருவஞானோத்தர ஆகமம்ஞானபாதம் தமிழ்மூலமும்முத்திரத்தின விருத்தியுரையும் | 1—0—0 |
| தசகாரிய விளக்கம் | 0—0—0 |

தபாற் செலவு வேறு.

பொ. முத்தையபிள்ளை,
சிவாகமசங்கம்,
நகரச்சிவன்கோவில்,
தேவகோட்டை.

(Q. 70.)


பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.





அநேக பரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்று விளங்குவதோடு 25.8-23 சென்னையில் நடந்த தமிழ் வைத்திய கான்பரன்ஸில் முதல்த்தர தேவ ஔஷத தங்கபஸ்மத்துக்கு தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும் பெற்றவர்.

பழனி, சி எம். - சாமி,

## மகா வீரிய தங்க பஸ்பம்.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

அதிக வயதாலும் பலவீனத்தாலும் இழந்துபோன வீரியத்தைத் திரும்பக் கொடுத்து இழந்தனம், சுபும்சகம் முதலியவைகளை நீக்கி சப்த தாதுக்களையும் நரம்புத் தளர்ச்சியையும் வலுப்படுத்தி, காசகம் கிராணி முதலியவைகளால் உண்டான, சாஸ்வத சரீர தூர்பிலதடங்களை அகற்றி, வாழ்க்கையில் தளராச் சந்தோஷத்தையும் புத்ர சந்தானத்தையும் உண்டாக்குவதில் ஜெயம்பெற்றது.

1 மண்டலம் 48 நாள் பஸ்பம் ரூபா 20, அரை மண்டலம் 24 நாள் பஸ்பம் ரூபா 10.

நற்சாக்ஷி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் நல்லபலமும், பசியும், தாதுபுஷ்டியும் உண்டாயிருக்கின்றன. கே. எஸ். கோவிந்தசாமி நாயுடு, ரகாங்கோடு, செரம்பான் F. M. S. 24-8-25.

### குருநாகபஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்பிரேஷன் அவசியமில்லை முளை தானே கரையும். சீழ் மூலம், இரத்த மூலம், குத்தல் மூல முளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

### குருதாளகஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், கட்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும சரி 8 வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கை கண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4[illegible]

### [illegible]ப எண்ணெய்.

இது ஸ்திரீகள் சஞ்சீவி எனலாம். மாதாந்திர வயிற்றுவலியை [illegible]ந்தும். சரியாய்ப் பகிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கிக் கெர்ப்பமுண்டாகும். மிக்க அனுபவமானது. புட்டி ஒன்று விலை ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், நினைத்தகாரிய சித்தி, தனலாபம், புத்திர சந்தானம், தெய்வத்துணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின்பிணி, முதலியன நீங்கும். சத்து 1க்கு ரூபா 2, 6 சத்து ரூபா 10.

### ரோம சங்காரி.

ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது. தோல் கெடாது. புட்டி 1க்கு அணா 8.

### சர்வபடை நிவாரணி.

சகல மேப்படை, ஊறல், பூச்சிக்கடி, வண்டுக்கடி படர்தாமரை இவைகள் ஒரே நாளில் உதிர்ந்துவிடும். உடனே அரிப்பு நிற்கும். தோல் கெடாது. புட்டி 1க்கு அணா 8.

### பிரமேக நிவாரணி,

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், மற்றும் மேக ரோகங்கள், நீர்ச்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும் நிச்சயமாய் 3 வேளையில் தீரும்; தவறாது. புட்டி ஒன்றுக்கு ரூபா 2.

### வீரியவிர்த்திக்கு நிகரற்ற மன்மத கோலாகல குளிகை.

வீரியவிர்த்திக்கு இது நிகரற்றது இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக் குறைவு முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி உண்டாகும். வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து [illegible]த்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

120 குளிகை ரூ. 10. 60 குளிகை ரூ. 5 30 குளிகை ரூ 3. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2.


நற்சாக்ஷி:—சிலோன் காமபோலா பஸ்ராக் எஸ்டேட் ஆறுமுகம் பிள்ளை 10-8-25-ல் எழுதுகிறார்: தங்கள் மன்மதகோலாகல குளிகை சாப்பிட்டதில் நல்ல தாது புஷ்டியும், பலமும் உற்சாகமும் கொடுத்து சந்தோஷமாகத் தெரிகிறது. இன்னும் 30 குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுள்வேத டாக்டர், **C. மலையப்பசாமி** நித்தியானந்த மெடிகல்ஹால், பழனி, S. I.

(Q. 71 B)

## அந்தஉபத்திரவத்தை என்பொறுத்துக்கொள்ள?

வாதரோகத்தினால உங்கள் வாழ்வு
பயங்கரமும் பாரமுமாயிருந்தால் அதை
**லிட்டில்ஸ் ஓரியன்றல் பாம்**
தைலத்தினால் மாற்றிக்கொள்ளலாம்.
அது மிருதுவாய் நோவை யகற்றிடும்.
இன்றே ஒரு புட்டி வாங்கிக்கொள்ளுங்கள்.
(2 26)




(Y 51 B.)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் அக்ஷய௵ வைகாசி௴ உ௪௨ வியாழக்கிழமை.

## தனித்தமிழ்ப் பைத்தியம்—௧.

தமிழ்மொழியோடு சம்ஸ்கிருதபதங்களையும் விரவிப் பிரயோகித்தல் தொன்றுதொட்டுள்ள ஆட்சியாகும். பண்டைக்காலத்துப் புலவர்களும் மற்றும் நூலாசிரியர்களும் தாம் செய்த நூல்களில் வடமொழியைத் தம்மொழியோடு கலந்து தமிழ் நூல்கள் செய்திருக்கின்றார்களென்பதனை அந்நூல்களைப் படிப்பாரேவரும் நன்கு விளங்கிக்கொள்வர். பிற்காலத்துச் செய்யப்பட்ட தமிழ் வசன நூல்களிலும் சம்ஸ்கிருதச் சொற்கள் எடுத்து ஆளப்பட்டுள்ளன. தமிழகத்தார் சம்பாஷிக்கும்போதும் அச்சம்பாஷணையில் சம்ஸ்கிருத பதங்கள் விரவி வருகின்றன. சம்ஸ்கிருத பதங்களைத் தமிழில் உபயோகிக்கும் முறையை நன்கு எடுத்து விளக்கும்பொருட்டு, பிரயோக விவேகம் முதலிய இலக்கணநூல்களுஞ் செய்யப்பட்டுள்ளன.

திருக்குறள் முதலிய நீதிநூல்களிலும், இராமாயணம் பாரதம் முதலிய இதிகாசங்களிலும் கந்தபுராணம் பெரியபுராணம் முதலிய புராணங்களிலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் தேவாரம் திருவாசகம் முதலாம் அருட்பாக்களிலும் திராவிடமாபாஷியம் முதலாம் வசனநூல்களிலும், பிற்காலத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வித்துவான் தாண்டவராயமுதலியார் ஸ்ரீமத் சபாபதி நாவலர் முதலியோர் செய்த வசனநூல்களிலும், இக்காலத்து வெளிவரும் தமிழ் நூல் எவற்றினும் வடமொழிப் பிரயோகம் மலிந்து விளங்குகின்றது.

இங்ஙனமெல்லாமிருப்ப, தென்னிந்தியாவிலே நவீனகொள்கையுடைய ஒருசாரார் தனித் தமிழ்[illegible]பயோகித்தல் வேண்டும்; வ[illegible]மணமும் ஆகாதென்று சாதிக்கின்றார்கள். தனித் தமிழ்மொழியிற் சில நூல்களைத் தாம் நவீனமாகச் செய்யத் தொடங்கிச் சொற்சுவை பொருட்சுவை செவிக்கினிமை இலகுவில் விளங்கவைத்தல் முதலியனவின்றி இடர்ப்படுகின்றார்கள். சம்ஸ்கிருதபதங்கள் விரவிச் செய்யப்பட்ட பழைய நூல்களையெல்லாம் வெறுத்தொதுக்கிவிட்டார்கள்; வேதாகமங்களைத் தள்ளிவிட்டுத் தமிழிலே வேதாகமங்கள் இருந்தனவென்றும் அவைகளைக் கடல் கொண்டுபோய்விட்டனவென்றுஞ் சொல்லுகின்றார்கள். சமணாசிரியர்களாலும் பௌத்த ஆசிரியர்களாலும் இயற்றப்பெற்ற சீவகசிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்களே சம்ஸ்கிருதபதம் அதிகம் விரவாதனவென்று கூறி அவைகளையே பாராட்டி வருகின்றார்கள். வடமொழிப் பிரயோகஞ் செய்தனரென்று தோஷஞ்சுமத்தி, இந்த நவீனகொள்கையுடையார் சித்தாந்த சாத்திரங்களைச் செய்த சந்தானகுரவர்களையும் தமிழ்வேதங்களைப் பாடிய சமயாசாரியர்களையும் புராணேதிகாசங்களைச் செய்த கச்சியப்பர் கம்பர் முதலாம் பெரும புலவர்களையும் அருட்பாக்களைச் செய்த பட்டினத்தார் அருணகிரிநாதர் தாயுமானவர் முதலாம் மகாஞானிகளையும் உபேட்சிக்கின்றார்கள். மந்திரங்களை வெறுக்கின்றார்கள்; பஞ்சாக்கரத்தை உச்சரிக்கக் கூசுகின்றார்கள்; இன்னும் இவர்கள் சிலர் இக்காலத்திற் செய்து வரும் அற்புதங்கள் பல.

தமிழ்நாட்டிலேயுள்ள இச்சிறுபாலார் இவ்வாறு செய்துவருதற்குக்காரணம் சம்ஸ்கிருதத்தின்மீது இவர்கள் கொண்டுள்ள துவேஷமல்லவாம். பிராமணர்மீது கொண்ட பகைமையே இதற்குக் காரணமாம். பிராமணர்மீது கொண்ட பகைமையைச் சம்ஸ்கிருதத்தோடு சாதிப்பானேன் என்று கேட்டால் சம்ஸ்கிருதம் பிராமணருக்குமாத்திரம் உரிய பாஷையாம். ஆனமையினால் சம்ஸ்கிருதத்தை ஒதுக்கிவிடுதல் பிராமணரை ஒதுக்கிவிடுதலாக முடியுமாம். ஆனால் இவ்விஷயத்தில் ஒரு ஆசங்கை பிறக்கின்றது. சம்ஸ்கிருதம் பிராமணருக்குமாத்திரமுரிய பாஷையென வைத்துக்கொண்டாலும், முற்காலத்துள்ள பிராமணருக்கல்லாமல் இக்காலத்துள்ள தென்னிந்திய பிராமணருக்கு அது உரிய பாஷையாகக் காணப்படவில்லையே. இக்காலத்திலே பிராமணருக்குரிய பாஷை ஆங்கிலமல்லவா! இக்காலத்திய பிராமணருட் பெரும்பாலார் தமிழையும் சம்ஸ்கிருதத்தையுங் கைவிட்டு ஆங்கிலத்தையல்லவா கைக்கொண்டிருக்கின்றார்கள். ஆனதன்மையினாற் பிராமணராற் பெரிதுங் கைக்கொள்ளப்படும் ஆங்கிலத்தையன்றோ, இந்த நவீனகொள்கையுடையார் அகற்றிவைத்தல் வேண்டும்.

இனி, பிராமணருக்கும் இந்தப் பிராமணரல்லார் சிலருக்குமிடையே யெழுந்த துவேஷத்தின் காரணம் யாதென ஆராயப்புகின், தென்னிந்திய பிராமணர் அங்குள்ள பிராமணரல்லாதாருக்கு அரசாங்க உத்தியோகமொன்றையும் விடாமல், தாங்களே ஆட்சிப்பண்ணிவருகின்றார்களாம். இந்த நியாயம்பற்றிப் பிராமணரைப் பகைப்பது புத்தியின்பாற்படுமோவென்பது பெருஞ் சந்தேகத்திற்கிடமான கருமம். மேலும் பிராமணரைப்போல் இந்த நவீனகொள்கையுடைய பிராமணரல்லாதார் சிலரும் உத்தியோகம் பெறவேண்டின், அதற்காகிய முயற்சிகளைத் தாமுஞ் செய்தலை விடுத்து, சம்ஸ்கிருதபாஷையைப் பிராமணருடைய பாஷையெனக்கொண்டு அந்தப் பாஷையைப் பகைத்துப் பிராமணருக்குக் கேடு விளைக்கலாமென முயல்வது "கலியாணத்தை நடவாமற் றடுப்பதற்காகச் சீப்பையெடுத்து ஒளித்துவைத்தவர்" செயல்போலாகும்.

---

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்).

சத்தியசந்திரவர்மனைக் கண்டமாத்திரத்தே சாஸ்வதிகுமாரி மிக்க நாணத்தோடும் அச்சத்தோடும் எழுந்து கொடியென ஒல்கிப் பூமியைப் பார்த்தபடி நின்றாள். விதிவசத்தாற்போலும் அந்தஇராசகுமாரியினுடைய சிந்தை சத்தியசந்திரனிடம் அவளையறியாமலே நடந்துவிட்டது. அரசிளங்குமாரனும் அவள்மேற் காதல்கொண்டான். அவள் சிறிதுநேரம் செயலற்று[illegible]சும்மா நின்[illegible]ள். பின்னர் சாஸ்வதி கு[illegible]ரியைநோக்[illegible] "பாவாய், நீ யாரென அறிய விரும்புகின்றேன்" என்று கேட்டான் "நான் ஒரு அரச கன்னிகை; விதியின் செயலால் இங்கு வந்தேன்" என்று அரசிளங்குமாரி விடை கூறினாள். சாஸ்வதிகுமாரி அரசவமிசத்தவள் என்று சொல்லக்கேட்டமாத்திரத்தே சத்தியசந்திரனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு ஒரு எல்லையில்லை. "அரசகுமாரியே, யான் இந்த நாட்டைப் பரிபாலிக்கும் அரசனுடைய புதல்வனவன்" என்று சத்தியசந்திரன் சொல்லுதலும் "நான் அதனையறிவேன்" என்று இராசகுமாரி மிக்க வினயத்தோடு ஒவ்வொரு சொல்லாக மொழிந்தாள். இதற்கிடையில், அந்தப்புரத்துப் பணிப்பெண்ணொருத்தி யாதோ கருமார்த்தமாக அச்சோலையை நோக்கி வருதலும், அரசகுமாரன் அரசிளங்குமாரியை நோக்கி "கன்னிகாரத்தினமே, எனது அன்னையாரின் பணிப்பெண்ணொருத்தி இவ்விடம் நோக்கி வருகின்றாள்; நாம் இருவரும் இங்கே [illegible]ற்பதைக் காண்பாளாயின் அவள் விபரீதமாகநினைப்பாள்; யான் செல்கின்றேன்; ஆனால் நான் உன்மீதுகொண்டகாதல்உண்மையானது" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டுக் கடிதில் அகன்றான். வந்த பணிப்பெண் இராசகுமாரனைக்கண்டிலள். சாஸ்வதிகுமாரியை நோக்கி "ஏன் அம்மா, தன்னந்தனியே இவ்விடத்தில்நிற்கின்றீர்" எனலும் "சும்மா பொழுது போக்கின் பொருட்டு நிற்கின்றேன்" என்று இராசகுமாரி சொன்னாள். இருவருஞ் சிறிது நேரம் அவ்விடத்தில் நின்று சில மலர் கொய்துகொண்டு அந்தப்புரத்திற்கு மீண்டனர். சத்தியசந்திரனைக் கண்ட நேரந்தொடக்கம் இராசகுமாரியின் மனத்திற் பெரும் மாறுதல் உண்டாயது; "உன்மீது யான்கொண்ட அன்பு உண்மையானது" என்று சத்தியசந்திரன் கூறியவார்த்தை அவளிடத்திருந்த மனத்துயரத்தையும் அகற்றிவிட்டது. இராசகுமாரன் தன்னை மணஞ் செய்வான் என்று எண்ணினாள். பின்னர், அநாதையாகிய தன்னை அவன் மணஞ் செய்வானோ என்றும் மனம் பேதலித்தாள் எது நடக்கவேண்டுமோ அது நடந்தே தீரும் நாம் மனக்கோட்டை கட்டுவதினால் ஆவதொன்றில்லையென்று நினைத்தாள்.

* * *

சத்தியசந்திரவர்மனுக்குச் சாஸ்வதிகுமாரியை மணஞ்செய்துவைத்தல்வேண்டுமென்ற எண்ணம் அவனுடைய பிதா மாதாக்களிடத்திற் குடிகொண்டிருந்தது. ஆனால் அவர்கள் தங்கள் மகனுக்காயினும் இந்தஇராசகுமாரிக்காயினும் தங்கள் உள்ளக்கிடக்கையை வெளிவிட்டிலர். அரசன் தனது புரோகிதரைக்கொண்டு விவாகத்திற்குரிய சுபதினத்தை நிச்சயித்து, மற்றைய அரசர்களுக்கும் சுற்றமித்திரர்களுக்கும் மணவோலை அனுப்பினான். குறிக்கப்பட்ட சுபதினத்திலே சகல சிறப்புகளோடும் இருவருக்கும் விவாகம் விதிப்படி நிறைவேறியது. சாஸ்வதிகுமாரியெனிலோ "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்றபிரகாரம் தன்னுயகனுடைய குறிப்பறிந்து அதற்கியைய நடந்துவந்தாள். சாஸ்வதிகுமாரியின் குணாதிசயங்களைக் கண்ட அவனுடைய மாதுலனும் மாமியும் அவளிடத்துப் பேரன்பு பாராட்டிவந்தார்கள். சாஸ்வதிதேவி காலகதியில் இரு ஆண் குழந்தைகளைப் பெற்றாள். சிலகாலஞ் செல்ல அந்த அரசன் இவ்வுலகவாழ்வை நீத்தனன். சத்தியசந்திரனே அந்த நாட்டிற்கு அரசனானான்.

* * *

சத்தியசந்திரன் செங்கோல்செலுத்தி வரும்நாளில் ஒருதினம் தன் மந்திரியாகிய கோவிந்தநாதனுடனும் வேடர்களுடனும் கானகத்தின்கண்ணே வேட்டையாடச் சென்றான். வேட்டையாடும்போது அரசன் முன்னும் மந்திரி பின்னுமாக ஒரு வேங்கையைத் துரந்துசென்றனர். கோவிந்தநாதனென்பவன் துணிவற்றவன்; பேடித்தனமுள்ளவன்; மந்திரியானவன் அரசனுக்குப்பின்னே அரைமனத்தோடு தொடர்ந்து செல்லும்போது, புலியை வேகமாத் துரந்துசென்ற வேந்தன் இவனுடைய கட்புலனுக்கு அகப்படாது அடர்ந்த காட்டிலே மறைந்துவிட்டான்; இதற்கிடையிற் புலியின் உக்கிரமான சத்தமொன்று கேட்டது. மந்திரி சிறிது விரைவாகச் சென்று சத்தமெழுந்த இடத்திற்குச் சமீபமாக நாற்புறமும் பார்த்தான். அரசனையேனும் புலியையேனும் அவன் கண்டிலன். புலி அரசன்மீது பாய்ந்து அவனை இழுத்துச் சென்றுவிட்டதென்று மந்திரி எண்ணிக்கொண்டு, வேடர் நிற்குமிடத்திற்கு மீண்டு வந்து அரசன் புலியடித்து மாண்டான் என்று தெரிவித்தான். எல்லோரும் அதிக கவலையோடு பட்டினத்திற்குத் திரும்பினர்.

* * *

தன்னுடைய நாயகனை அரிதிற் பிரிந்த சாஸ்வதிதேவி அவன் வரவை மிக்க ஆவலோடு பார்த்தவளாகவேயிருந்தாள். தன்னுயகனையொழிந்த ஏனையோரெல்லாரும் பட்டினத்திற்கு மீண்டுவிட்டனரெனக் கேள்விப்பட்டாள். இதற்கிடையில் ஒரு தாதி அழுகண்ணும் சிந்தியமூக்கும் விரித்த கூந்தலுமாக ஓலமிட்டுக்கொண்டு தன்னிடம் ஓடிவருதலை சாஸ்வதிகுமாரிகண்டு தானும் அவளுக்குச்சமீபமாக ஓடிச்சென்று "வந்த ஆபத்து என்ன" என்று கேட்டாள் அம்மா எங்கள் மகாராசாவைப்புலிகடித்துச்கொன்றுவிட்டதாம்; மந்திரியும் வேடருஞ் சொன்னார்கள்' என்று தாதி சொல்வதற்கிடையில் அரசன்றேவி அடியற்ற மரம்போல் நிலத்திலே வீழ்ந்து மூர்ச்சையானாள். அரசனுடையதாயும் மற்றெல்லோரும் ஆங்குவந்து கதறி நிலத்திற் புரண்டனர். அந்நகர் முழுவதும் பின்னர் நாடுமுழுவதும் அழுகையொலியாகவேயிருந்தன. சாஸ்வதிகுமாரியை முதியபெண்கள் வைத்தியோபசாரஞ்செய்து எடுத்து ஒருவாறு தேற்றினர். "என்னிருகுழந்தைகளும் இல்லாவிட்டால் நானும் என்பிராணநாதருடன் சென்றிருப்பேனே" என்று பெரிதுங் கலங்கினாள்.

வரும்.

---

### மோட்டர் விபத்து.

சென்ற வெள்ளிக்கிழமை சுன்னாகத்திலுள்ள நாவிதன் ஒருவனை H. 259-ம் இலக்கங்கொண்ட மோட்டர் வண்டி இடறியது. நாவிதனுக்கு ஒருகால் முறிந்தது. சாரதி யாழ்ப்பாணம்பொலிஸ்கோட்டிலே குற்றஞ் சாட்டப்பட்டு 500 ரூபா பிணையில் விடப்பட்டிருக்கின்றனர்.

---

### ஒருசிறுமி விஷந்தின்டி இறந்தமை.

சென்றதிங்கட்கிழமை இரவு வண்ணார்பண்ணை தட்டாதெருவுக்குச் சமீபமாயுள்ள ஒருவீட்டிலே நித்திரையாய்க்கிடந்த ஒரு எட்டுவயதுச்சிறுமி விஷந்தின்டி இறந்தனள்.

---

### மானிப்பாய்ச் சைவமகாஜனசபை.

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு அறரைமணிவரையில் மானிப்பாய்ச் சோதிவேம்படிச் சைவவித்தியாசாலை மண்டபத்திலே டிெ சபையாரின் கேள்விப்படி திரு M. S. இராசரத்தினம் (நியாயதுரந்தரர்) அவர்களால் சமணசம்பந்த வரதைப் பற்றிப் பிரசங்கஞ் செய்யப்பட்டது.

கடித.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசையும் சங்கீத கதாப்பிரசங்கமும்.

இந்த௴ 16௳ (29-5-26) சனிக்கிழமை பகல், தெல்லிப்பழைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் குருபூசையும், இரவு ஸ்ரீ த. குமாரசுவாமிப்பிள்ளையவர்களால் டிெ சுவாமிகளின் அதியற்புத திவ்விய சரித்திரம் பக்கவாத்தியசகிதமாகப் பிரசங்கமும், டிெ வித்தியாசாலையாசிரியர்களுள் ஒருவராகிய பிரமஸ்ரீ. அ. தியாகராஜ ஐயரவர்களின் விடாமுயற்சியாலும் ஊரவர்களின் சகாயத்தினாலும் இனிது நடைபெற்றன.

கடித.

### திருஞானசம்பந்த மூர்த்திநாயனார். திருநாட் கொண்டாட்டம்.

நிகழும் வைகாசி௴ 16ம்௳ சனிக்கிழமை திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் குருபூசைத் தினமாகும். அத்தினம் சூராவத்தை அம்மன் கோவிலில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது அன்றுமாலை அலங்கரிக்கப்பெற்ற கோயில்மண்டபத்திலே, அன்பர், வயோதிகர், பெண்கள், மாணவர் ஆகியோர் சமுகமாயிருந்து புராணங்கேட்ப, ஆளுடைய பிள்ளையாரது திவ்விய சரித்திரம் வாசிக்கப்பட்டது. அந்நாயனார் பாடிய முக்கிய திருப்பதிகங்களின் முதற்பாசுரம் ஒவ்வொன்றும் இடையிடையே அவ்வவ்விடங்களில் பக்தர்களால் ஓதப்பட்டன. புராணம் படித்துமுடிந்தபின், கோவிலில் விசேஷ பூசை நடைபெற்றது. யாவரும் விபூதி சந்தனம் குங்குமம் தரித்து, தாம்பூலம், வாழைப்பழம், அமுது முதலானவை ஏற்றுத் தத்தம் இல்லம் மகிழ்ச்சியுடன் ஏகினார்கள்.

கடித.

---

### ஒருவனைச் சருவியபின் தற்கொலை செய்தமை.

கொழும்பிலே மூகமது என்னும் ஒருவன் வேறொரு மகமதியனைச் சருவிப் படுகாயப்படுத்தியபின் அங்குள்ள கால்வாயில் வீழ்ந்து தற்கொலை செய்தனன்.

---

### சோரமாகக் கள்ளுச்சேர்த்தவனுக்கு 200 ரூபா அபராதம்.

கம்பளையிலே வண்டா என்னும் ஒருவன் சோரமாகக் கள்ளுச் சேர்த்தானென அங்குள்ள பொலிஸ்கோட்டிற் குற்றம் சாட்டப்பட்டு 200ரூபா அபராதம் அல்லது ஒருமாதக் கடுழியச் சிறை விதிக்கப்பெற்றான்.

---

### புகைரதவிபத்து.

சென்ற சனிக்கிழமை காலை கண்டிப் புகைரதஸ்தானத்திலேயந்திரவண்டியொன்று பிரயாணிகளிருந்த வண்டிகளை அதிவேகமுடன் சென்று மோதியது. உடனே சில வண்டிகள் சேதப்பட்டன. பிரயாணிகளுட் பலர் காயப்பட்டனர். கடுங்காயமுற்ற எண்மர் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டனர்.

---

### அதிக குடியின் முடிவு.

சென்ற வெள்ளிக்கிழமை வெள்ளவத்தையிலே நகரசங்க "ஓவசிய"ராக விருந்த கிறிஸ்ரியன்ஸ் என்னும் ஒருவர் மிகவும் அதிகமாகக்குடித்து வெறிகொண்டு தெருவிலே திரியும்போது பொலீசர்கையிற் சிக்கினர். அவரதுநிலைமை சீவமோசம் விளைப்பதாக விருந்தமையினாற் பொலீசர் குடிகாரனைக் கொழும்பு வைத்தியசாலைக்குக்கொண்டுபோக அவர் அங்குத்தானே இறந்தனர்.

---

### வெள்ளவத்தைத் திருக்குறட்பயிற்சிக்கழகம்

சென்றசனிக்கிழமை டிெகழகமண்டபத்திலே திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய குருபூசைசெவ்வனே நடைபெற்றது. குஞ்சிதபாதநடராசப் பெருமானுடைய திருவுருவப்படத்தை நன்கு அலங்கரித்து விசேடபூசை முதலானவை செய்யப்பட்டபின் நாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்களுட் சில ஓதப்பட்டன. அடியார்கள் டிெநாயனாருடைய திவ்விய சரித்திரத்தைக் கேட்டு ஆனந்தித்தனர்.

—கடித.

---

### கடலில்மூழ்கியபோது மீட்டவருக்குப்பரிசு.

மிஸ்ரர் அல்விறெட் டீ. சில்வா என்பவர் சில நாட்களுக்குமுன் கொழும்பிலே ஒருவர் கடலில் நீராடும்போது நீரோட்டத்தினாற் கவரப்படுவது கண்டு மிக்க துணிவுடன் கடலிற் குதித்து அவரைக் காப்பாற்றினர். இதன்பொருட்டு எமது தேசாதிபதியவர்கள் அவருக்கு ஓர் தாராதரப்பத்திரமும் ஐம்பது ரூபாவும் பரிசாகக் கொடுத்தனர். அப்பரிசுகள் மேல்மாகாண ஏசன்றர் மூலமாக வழங்கப்பட்டன.

### கடமைபார்த்த பொலிஸ்காரனைச் சருவியமை.

சென்ற வெள்ளிக்கிழமை இரவு நாவன்வலையிலே நிகழ்ந்த கொலை ஒன்றிற் சம்பந்தப்பட்ட ஒருவனைப்பிடிக்கும் பொருட்டுப் பொலிஸ்காரன் ஒருவன் காத்து நின்றபோது அவ்வழிச் சிறிது அச்சத்துடன் சென்ற இருவரைச் சந்தித்தனன். பொலிஸ்காரன் அவர்களுள் ஒருவனைப்பிடித்தலும் இருவரும் அவனை அடித்துக் கத்தியினாற் குற்றினர். பொலிஸ்காரன் அவர்களுடையகையில் அகப்படாவண்ணம் ஒருவாறு தப்பிப்பொலிஸ்தானத்துக்குச்சென்றனன்.

### பாஷாணை மருந்தியவன் பிரேதப்பெட்டியைக் கொண்டுவரச்சொல்லுதல்.

மாத்தளைக்குச் சமீபமாயுள்ள மாதத்தவெலா என்னுமிடத்திலே ஜயசேகரா என்னு மொருவன் சென்ற மூன்றுமாதகாலமாக வாதரோகத்தினால் வருந்தினன். சுதேசவைத்தியர் பலர் முயன்றும் நோய் மாறவில்லை. இதனால் அதிக துயாமுற்ற ஜயசேகரா என்பவன் தற்கொலை செய்ய முயன்று, சென்றவெள்ளிக்கிழமை வெள்ளைப்பாஷாணத்தைக் கோப்பித்தண்ணீருடன் கலந்து குடித்தான். விஷபத்தை அறிந்த அவனுடைய சகோதரன் அவனை வைத்தியசாலைக்குக்கொண்டுபோகும்பொருட்டு மோட்டா வண்டியில் ஏறும்படி கேட்க, "நான் வைத்தியசாலைக்குவரமாட்டேன்; எனக்காக ஒரு பிரேதப்பெட்டி கொண்டுவா" எனக்கூறினன். அங்குநின்றோர் அவனை வலிந்து தூக்கி மோட்டர் வண்டியில் வைத்து வைத்தியசாலைக்குக் கொண்டுபோயினர். பொலீசர் அவனிருந்த அறையைச் சோதித்தபோது போத்தலொன்றினுள் வெள்ளைப் பாஷாணமும் ஒரு கடிதமும் இருக்கக் கண்டெடுத்தனர். அக்கடிதத்தில் தனது மரணத்துக்குத் தானேகாரணமென எழுதப்பட்டிருந்தது.

### இந்தியஇளவரசரின் பரிதாபமான மரணம்.

சென்ற சனிக்கிழமை லண்டனிலுள்ள விடுதிச்சாலை யொன்றிலே ஐத்சோடிய இளவரசராகிய யெத்ரேற சிங் என்பவர் கொடிய வறுமை காரணமாக இறந்தனர்.

### கிள்ளான் இலங்கைத் தமிழர் சுப்பிரமணியசுவாமி கோயில்.

சென்ற மேமாதம் 17-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஆறரைமணி வரையில், ஷெ கோவிற் பரிபாலன சபையாருடைய வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது. கோவிற் பரிபாலன சபையார் செய்துள்ள கருமங்களை 1925-ம் வருடத்துக்குரிய அறிக்கைப்பத்திரம் காட்டுகின்றது.

### பிரமதேசத்திற் புயலினால் நேர்ந்த சேதம்.

சமீபத்தில் நிகழ்ந்த புயலினாலே இரங்கூனைச் சேர்ந்த அரக்கன் கரையோரம் கடற்றிரைகளினால் அதிக சேதப்படுத்தப்பட்டது. மாயாகிரித்தொடரின் இருபக்கங்களிலுமுள்ள கிராமங்களும் வயல் நிலங்களும் அழிந்தன. இறந்தவர்கள்தொகைசரியாகத்தெரியாவிடினும் 1200பேர்வரையில் இறந்தனரெனச் சொல்லப்படுகின்றது. ஆடு மாடுகளும் அதிகமாக அழிந்தன.

### இலங்கைப் பொலிஸ்பகுதித் தலைவர் விசேடபோலிஸாகக் கடமை பார்த்தல்.

விடுமுறைபெற்று இங்கிலாந்திலிருக்கும் இலங்கைப் பொலிஸ்பகுதித் தலைவராகிய மிஸ்ரர் எச். எல். டௌபிக்கன் அவர்கள், சிலநாட்களுக்குமுன் அங்குள்ள கூலியாட்கள் வேலை செய்ய மறுத்துநின்றபோது விசேட பொலிஸ்காரனாகக் கடமை பார்த்தனர். அவரது திறமைகாரணமாக ஏழுநாட்களுள் அவர் "சார்ஜன்" என்னும் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

### புதிய இந்தூர் மஹாராசா.

புதிய இந்தூர்மகாராசா சென்ற மேமீ 21உ வெள்ளிக்கிழமை "ருவல்பிண்டி" என்னும் புகைக்கப்பல் மார்க்கமாக இங்கிலாந்துக்குப் பிரயாணமாயினர். அவரது மேற்பார்வைக்காரராகும் டக்ரர் என். இ. கார்ட்டியும் ஆசிரியரும் அவருடன் செல்கின்றார்கள். மகாராசா தமது பிதாவாகிய (முடிதுறந்த) இந்தூர் அரசரை மார்சேயில்ஸ் என்னுமிடத்திற் சந்தித்து அவருடன் சுவிட்சர்லண்டின் கல்விக்கும்பொருட்டுஅக்ஸ்வோட்டுக்குப்புறப்படுவர்.

## இரணைமடுக் கொலைவழக்கு.

### ஏழுபேர் மரணதண்டனை விதிக்கப்பெற்றனர்.

ஒருவர் நிரபராதியெனக் காணப்பட்டார்;

### யாழ்ப்பாணக் கோட்டையினுள்ளேயே தூக்கிட்டுக் கொல்லப்படுவர்.

(முன் தொடர்ச்சி.)

வெள்ளிக்கிழமை விசாரணை.

ஜூரிமார் கொலை நடந்த இடந்தை நேரிற்சென்று பார்ப்பது நன்றுதயென்று நீதிபதிக்குச் சொல்லினர்: நீதிபதி இருபகுதி நியாயவாதிகளோடும் யோசித்தபின், விசாரணையை முடித்துக்கொண்டு அவசியமெனக் கண்டாற் போகலாமெனக் கூறினர்.

கற்பியின் சாட்சியம்.

மிஸ்ரர் தம்புவின் குறுக்குக் கேள்விகள்.

—நீ அதிகமாகப் பிச்சையெடுத்தல்லவா காலம் போக்குவது?—ஓம்.

—அன்றிரவு ஏழைகளுக்கெல்லாம் கஞ்சிவார்க்கப்பட்டது?—ஓம்.

—நீயுங் கஞ்சி வாங்கிக் குடித்திருக்கவேண்டும்

—நான் போகவில்லை, என்னுடைய பிள்ளை போனது;

—அப்பொழுது நீயும் உன்பிள்ளையும் நன்றாய்க் கஞ்சி குடித்தீர்களல்லவா?—இல்லை; அன்றிரவு என் பிள்ளை கஞ்சி வேண்டாமெனச் சொல்லிவிட்டது.

—இரவில் அகாலத்தில் நீ அந்த மார்க்கமாகப் போனதற்குக் காரணமென்ன? அரிசி வாங்கப் போனாயா?—இல்லை; அரிசி நேரகாலத்தோடு வாங்கிவந்துவிட்டேன்;

—நீ போனபோது இருட்டாய்விட்டதா?—இல்லை; நிலாவெளிச்சமிருந்தது.

—உனக்குச் சொந்தவீடில்லையா?—இல்லை.

—நீ வீட்டுக்குவீடு திரிவது வழக்கமல்லவா?—ஓம்.

—முருகேசுவைப்பற்றி நீ ஏதோ சொல்வதற்கு முந்திக் கோட்டார் முருகேசுவைப் பிடித்து விளக்க மறியலில் வைத்துவிட்டார்களல்லவா?—ஓம்.

—துரைசூரியரை உனக்குத் தெரியுமா?—முந்தித் தெரியாது;

—வழக்குக்குப் பின்புதான் உனக்குத் தெரியுமாக்கும்?—ஓம்.

—துரைசூரியரைப்பற்றிப் போலிஸ்மாரா உனக்கு முதன்முதற் சொன்னது?—இல்லை; வேறு யாரோ இவர்தான் 'சூரியர்' என்று சொல்லி எனக்குக் காட்டினார்கள்.

—இந்திய இரகசியப்போலிசாகிய கிருஷ்ணன் உனக்கொன்றுஞ் சொல்லவில்லையா?—இல்லை.

—அவர் உன்னுடன் ஒன்றும் பேசவில்லையா?

—இல்லை; ஆனால் அவர் சில கேள்விகள் கேட்டார். நான் அவற்றிற்கு மறுமொழி சொன்னேன்.

—முருகேசுவையும் அன்றிரவு நீ கண்டதோ என்று அவர் உன்னைக் கேட்கவில்லையா?—கேட்டவர்.

—முருகேசு ஒரு அலவாங்கைக் கொண்டுபோக நீ காணவில்லையோ என்று அந்த இரகசியப் போலிஸ் உன்னைக் கேட்கவில்லையா?—கேட்டவர்.

—உன்னைப் போலிஸ்தானத்திற்குக் கொண்டுபோய் அங்கு நின்ற போலிசரையெல்லாம் உனக்குக் காட்டவில்லையா?—இல்லை

—கிருஷ்ணன் போலிசரைக் காட்டிப் போலிசர் எத்தனைபேர்; அவர்களுடைய அதிகாரம் உனக்குத் தெரியாதா? என்று உனக்குச் சொல்லவில்லையா?—இல்லை.

(திங்கட்கிழமை விசாரணை)

இவ்வழக்கில் வேறுஞ் சில சாட்சிகள் விளங்கப்பட்டனர். அவர்களுட் பிரதானமானவர்கள் யானையிறவுப் புகைரதப்பகுதி வாயிற்காவற்காரன், மிஸ்ரர் ராசரத்தினம், இரணைமடு மணியம் மிஸ்ரர் பின்னைநாயகம், வலிகாமம்வடக்கு மணியம் மிஸ்ரர் சந்திரசேகரம் என்னுமிவர்கள சாட்சியங் கூறினர். வழக்காளி பக்கத்துச் சாட்சிகளை விசாரணை செய்து முடிப்பதற்கிடையில் நீதியாசர், எதிரிகள் ஒவ்வொருவரையும் ஏதுஞ் சொல்லவேண்டியிருந்தாற் சொல்லலாமென்று கேட்டனர்.

1-ம் எதிரி: "ஆண்டவனே நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை, இராசாங்கத்தார் ஊரவர்கள் எல்லாரையும் பிடித்து அடைத்துவிட்டார்கள் இது நீதியாகுமா?"

2-ம் எதிரி: "ஆண்டவனே, நான் இந்தக் கொலையில் உண்மையாகச் சம்பந்தப்பட்டிருந்தாற் கடவுள் தப்பாமல்தண்டிப்பார்"

3-ம் 4-ம் எதிரிகள்: நீதிராசாவே, நாங்கள் ஒன்றும் அறியோம்."

5-ம் 6-ம் 7-ம் எதிரிகளும்: தங்களுக்கு இதைப்பற்றி யொன்றுந் தெரியாதென்று தனித்தனி சொன்னார்கள்.

8-ம் எதிரி: "ஆண்டவனே, கோயிலிலே நடந்த சண்டையில் சேனாதிராசாவையும் மற்றைப்பகுதியாரையும் சமாதானம் பண்ணப்போனேன்; போதகிராது போலிஸ் விதானையோடு போய்ச் சமாதானஞ் செய்தேன்; அன்றுதான் சேனாதிராசாவை நான் கடைசியாகக் கண்டது. பின்பு இரணைமடுக் காட்டிலே சேனாதிராசாவின் பிரேதங் கிடக்கிறதென்று கேள்விப்பட்டேன். இவ்வளவுந்தான் எனக்குத் தெரியும்."

முடிக்குரிய நியாயவாதி தம்பக்கத்திற்காகிய விசாரணை யொழிந்ததென்றும் தம்முடைய உபந்நியாசத்தை இனிமேற் செய்யத்தொடங்குவேனென்றுஞ் சொன்னார்.

நீதியாசர்: யூரித்தலைவரை நோக்கி, கொலை நிகழ்ந்த இடத்தைத் [illegible] பார்க்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா?

யூரிமார் தலைவர்: "ஆண்டவனே, உமது சித்தப்படி செய்யலாம்."

நீதியரசர்: மிஸ்ரர் தம்பு, நீர் என்ன சொல்லுகிறீர்?

மிஸ்ரர் தம்பு: யாழ்ப்பாணத்து நிலாவைப் பற்றித்தானே அறிய விரும்புகிறீர்கள். யூரிமாருக்கு நான் செய்யவிருக்கும் உபந்நியாசத்தில் யாழ்ப்பாணத்து நிலாவைப் பற்றி நன்றாய்ச் சொல்லுவேன்; [illegible], யாழ்ப்பாணத்து நிலாவில் 55 வருடகாலமாக இருந்து வருகின்றேன்.

நேற்றைபத்தினம் (2-6-26) மேற்படி வழக்கின் தீர்ப்புச் சொல்லப்பட்டது. யூரிமார் இரண்டு மணித்தியாலம்வரையில் யோசித்தபின்னர் முதல் ஏழு எதிரிகளும் கொலைக் குற்றவாளிகளென்றும், எட்டாம் எதிரிமாத்திரம் நிரபராதியென்றும் எல்லாரும் ஒரே சம்மதமாகத் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டனர்.

எதிரிகளின் பெயர்:

1ம் எதிரி கந்தையா செல்லத்துரை
2 ,, ,, சின்னத்தம்பி முத்து
3 ,, ,, வேலுப்பிள்ளை மாரிமுத்து
4 ,, ,, ஆறுமுகம் மாணிக்கம்
5 ,, ,, ஆறுமுகம் சுப்பர்
6 ,, ,, சின்னவன் எல்லுவன்
7 ,, ,, அம்பலவன் முருகேசன்
8 ,, ,, பொன்னம்பலம் அம்பலவாணர்.

நீதியரசர் பின்வருமாறு தீர்ப்புக் கூறினர்: யாழ்ப்பாணக்கோட்டையுள் 1-ம் எதிரியும் 2-ம் எதிரியும் வருகிற ஜூலாய்மீ 7உ தூக்கிட்டுக் கொல்லப்படுவோர். 5-ம், 6-ம், 7-ம் எதிரிகள் ஜூலாய்மீ 8உ மேற்படி கோட்டையுள் தூக்கிட்டுக் கொல்லப்படுவோர் 3-ம் எதிரியும் 4-ம் எதிரியும் ஜூலாய்மீ 10உ மேற்படி கோட்டையுள் தூக்கிட்டுக் கொல்லப்படுவோர்.


### அடைவுநகைவிற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவுபிடிக்கும் வண்மேற்கு க. செ. த செ. செல்லையாபிள்ளையிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1925ஆ எப்பிரல்மீ

| நம். | திகதி | ரூபா | ஊரும் பெயரும் | நகைகளின் விபரம். |
| --- | --- | --- | --- | --- |
| 445 | 24 | 11 | வண்மேற்கு தில்லையம்பலம் சின்னத்தம்பி | சாதாமோதிரம் 1 |
| 460 | 29 | 92 | வண்கிழக்கு சண்முகம் சுப்பிரமணியம் | இ. பவுண் 2 கோர்த்த தாலிச்சங்கிலி 1 |
| மேமீ | | | | |
| 488 | 4 | 30 | வண்மேற்கு கந்தப்பிள்ளை கனகரெத்தினம் | சாட்டட்டியல் 1 |
| 489 | 5 | 42 | அச்சுவேலி வல்லிபுரம் சின்னையா | பட்டணக்காப்பு சோடி 1 |
| 501 | 7 | 60 | ஆனைக்கோட்டை கணபதிப்பிள்ளை சண்முகம் | பூ காப்புச் சோடி 1 |
| 502 | 7 | 21 | வண்கிழக்கு அருணாசலச்செட்டி தியாகராசச்செட்டி | நீலவெள்ளைக்கடுக்கன் சோடி 1, சிமிக்கிவாளி சோடி 1 |
| 524 | 14 | 40 | வேலணை இளையதம்பி சின்னத்தம்பி | கம்பிப்புரானட்டியல் 1 |
| 578 | 28 | 30 | காரைதீவு ச. கனகசபை சங்கரப்பிள்ளை | சிகப்புக்கல் டிம்பிப்பதக்கம் 1 |

விற்பனவு:—அடுத்த வருகும் ஆனிமீ 5உ (19-6-26) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டாதைப் பிறகேகலாம் [illegible] ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(M's 872)

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.


### மத்தியமாகாணச் சைவமகா சபை.

நிகழும் அட்சய ஆண்டு சித்திரைத்திங்கள் 27-ம் (9-5-26) நாள் அன்றும், வைகாசித் திங்கள் 3-ம் (16.5.26) நாள் அன்றும், மேற்படி சபையின்கீழ், சபையின் பொருள் நிலையாளர்களிலொருவராகிய திரு. சோ. ஆனந்தசுந்தரம் அவர்களால், "திருவெண்காடர்" சரித்திரத்தைப்பற்றிச சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது. சொற்பொழிவாளர் முதலாம் நாள் திருவெண்காடாருடைய இளமைப்பராயம், இல்லறவாழ்வு, ஒழுக்கத்தின் சிறப்பு, அளவற்ற பேரன்பின்மாண்பு முதலியவைகளைப்பற்றியும், இரண்டாம் நாள் அப்பெரியார், துறவறம் பூண்டமை, நிகழ்த்திய அற்புதங்கள், முத்தியடைந்தமை ஆகியவைகளைப் பற்றியும் ஆங்காங்கு அடிகளின் பாடல்களையுங் கூறி, மிக்கஇனிய செந்தமிழ்நடையில் அதிவிரிவாக எடுத்தாண்டனர். திரு. ம. சி. பரமானந்தன், திரு. சு. செல்வநாயகம் என்னும் இவர்களாலும், சபைத்தலைவராலும் சிறந்த குறிப்புரைகள் கூறப்பெற்றபின், தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவெய்தியது.

வைகாசித்திங்கள் 3-ம் நாள் கூட்டந் தொடங்கியதும் சபைத்தலைவர், திரு. ம. சி. பரமானந்தன் அவர்கள் இச்சபையின் இணைச் செயலாளர்களிலொருவராக சபையின் வழிநிலை மன்றத்தாரால் நியமிக்கப்பெற்றனரென அறிவித்து, அவர் அப்பதவியை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி கூறினர்.

வைகாசித்திங்கள் 10-ம் நாள் (23-5 26) மேற்படி சபையின்கீழ், எழுதி வாசிக்கப்பெறும் கட்டுரைத் தொகுதியாகிய "செந்தமிழ்க்கோவை" என்னுந் திங்கள்வெளியீடு கோவை. க. மணி. க. அதன் ஆசிரியராகிய திரு. ம. சி. பரமானந்தன் அவர்களால் வாசிக்கப்பெற்றது. அத்தருணம் வழக்கறிஞர் திரு. பொ. பாலசிங்கமவர்கள், தலைமை வகித்திருந்தனர். முகவுரை, நீத்தார்பெருமை, தமிழர் மணமுறை, ஆகிய பொருள்கள், மிகவும் இனிய செந்தமிழ் நடையில், மிக்கவிரிவாய்ச் சபையோர் மனதிற் பதிவுறும்படி விளக்கப்பெற்றிருந்தன. திரு. சு. செல்வநாயகம் அவர்களாலும், திரு. எஸ் சபாபதியவர்களாலும் "நீத்தார் பெருமை" என்னும் பொருளில் வினவப்பெற்ற வினாக்களுக்கேற்ற விடை ஆசிரியரால் அளிக்கப்பெற்றபின், திரு. சி. முருகேசு அவர்கள், எம் சமய, மொழி முன்னேற்றத்தின் பொருட்டு ஏனைய சாதியாரைப்போல், யாமெல்லோரும் மிக ஊக்கத்துடன் முயற்சிக்கவேண்டும் என்றும், அன்றேல் எம் சமயமும் மொழியும் நாளாந்தம் தேய்ந்து வலியற்றுவிடுமென்றுங் கூறி ஆசிரியருக்கும் வணக்கமளித்தனர். பின் சபைத் தலைவர் சில அரிய குறிப்புரைகள் கூறித் தேவாரபாராயணத்துடன் கூட்டத்தை நிறைவேற்றினர். கடித.

### கல்லடி ஸ்ரீவேலாயுதஸ்வாமி கிராமப்பிரதக்ஷண ரதோற்சவக்காட்சியும் சமுத்திரதீர்த்தமும்.

கலியுகவரதராகிய சுப்பிரமணியக்கடவுள் அடியார்க்கருளும் அன்புடையராய்த்தமது சயம்பிரகாசசொரூபத்துடன் காட்சிகொடுத்தனுக்கிரகஞ் செய்தருளும் ஸ்தலமாகிய கல்லடிதேற்றுமரத்தின் நிழலில் தாமே ஞானசத்தியாகிய வேலாயுதபாணியாய் ஸ்ரீ வேலாயுதஸ்வாமியெனுந் திருநாமத்துடன் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும்பெருமானுக்கு, நிகழும்வைகாசி மாதம் 9 திகதி தொடக்கமாக அலங்கார உற்சவங்கள் ஆரம்பமாயின. இவ்வுற்சவங்கள் ஒவ்வொன்றும் வேற்பெருமானது திவ்ய கருணை நிறைந்த காட்சியாகவே யிருந்தனவன்றியும் அவரது திருவருளாஞ்ஞையினாலே ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தலமாதலின் அன்பினாலேயே அர்ச்சிக்கப்பட்டனவெலாம் மிகுந்த அலங்காரமாயிருந்தனவன்றோ! மேலும் இத்தகைய விழாக்கள் ஒவ்வொன்றும் செவ்வனே நடந்தேறிய பின்னர் பௌர்ணிமைத் திதியிலன்று இரவு பதினொருமணியளவில் வழக்கப்படி திருவிழா முடிந்ததன்பின் வேலாயுதப்பெருமான் கிராமப் பிரதக்ஷணஞ் செய்வதற்காகத் திரளான ஜனங்களுடனும்மேளவாத்திய கோஷத்துடனும் பற்பல வரிசைகளுடனும் ரதாரூடராய் எழுந்தருளியகாட்சி மிக்க ஆனந்தமே. இதுமட்டுமன்றோ! இப்படியே தெரு வீதிவழியால் மூன்று கிராமங்களை கடந்து சென்று நான்காவதாகிய மஞ்சந்தொடுவாய் எனுங் கிராமத்திலுள்ள விநாயகப்பெருமான் சந்நிதியிற் பூசையேற்று மீண்டும் திரும்பி வருகையில் ஒவ்வொருவரும் தங்கடங்கள் வாசல்கள் தோறும் நிறைகுடம்தீபம் முதலியனவைத்துப் பட்டுமுதலியன சாத்தி அர்ச்சனை செய்வித்துப் பண்ணிய உபசாரங்கள் அனைத்தும் பார்ப்பவர்மனதைப் பரவசமடையப் பண்ணின. பின்னர் சூரியோதயத்திற் சமுத்திர தீர்த்தக் காட்சியும் கொடுத்துப் பெருமான் தம்பதிக்கு எழுந்தருளப்பெற்றனர்.

எம்பெருமானது திருவருளையே ஆதாரமாகக் கொண்டு இத்தகைய ஆனந்த [illegible] உற்சவாதிகளை யேற்படுத்திய ஷை கோயில் அர்ச்சகர் ப்ரம்ம ஸ்ரீ மு. நவரத்தினசர்மா அவர்கள் முதலிய ஏனையோர் பலருக்கும் ஸ்ரீ வேலாயுதஸ்வாமி அனுக்கிரகஞ்செய்வாராகவும். இன்னும் சக்தியே மயமாகிய வேற்படைக்கலமானது அடியார்களின் மனதைக்கவர்ந்து மென் மேலும் உற்சவாதிகள் சியமமாகவும் மிக்க ஆனந்தமாகவும் நடைபெற வேண்டி வேலாயுதப்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். கடித.

# இந்துசாதனம்.

## குஷ்டரோகசாலை மாற்றமும் நோயாளிகளின் அதாபமும்.

இம்மகுடநாமத்துடன் ஓர் விஷயம் ஆங்கிலப்பத்திரிகை யொன்றில் வெளியிடப்பட்டு எங்கள் மத்தியில்வந்துலாவியதைக் கண்ணுற்ற எழைக் குஷ்டரோக நோயாளிகள் ஆற்றொணுத்துயரத்தோடும், மனவியாகுலத்தோடும் தெரிவிப்பதாவது:-இந்த விஷயத்தைக்கண்டு எங்கள் மனமானது அனலில் விழுந்த புழுப்போலத் துடிதுடித்து உண்மையை யாரிடம் முறையிடுவோமென்று எண்ணி எண்ணி "இந்து சாதனம்" பத்திரிகாசிரியர் அவர்களே தேசாபிமானி சமயாபிமானி யென்றும் வித்துவ பூஷணமென்றும் எண்ணி இவ்விண்ணப்பப்பத்திரத்தைத் தங்களுக்கே ஒப்படைக்கின்றோம்.

கனம்க்க ஐயா!

1703-ல் இக்குஷ்டரோக வைத்தியசாலையை ஸ்தாபித்த உலாந்தாக்கார இராஜகுமாரன் இந்நோயால் பீடிக்கப்பட்ட நாள் தொடக்கமாகச் சித்திரவிஸ்தீரமான ஓர் கல் எங்கள் தலைவருடைய ஆபீசில் பதிக்கப்பட்டிருக்கின்றது. மாதா பிதாக்கள் பிள்ளைகளுக்குத் தங்கள் காணிகளை ஒப்புக்கொடுத்த விதமாய், அக்குமாரனுக்குப் பின் வந்த நோயாளிகளுக் காறுதலாகவும் மகிமையாகவும் இவ்விஸ்தானம் அளிக்கப்பட்டது. அன்றுதொட்டு இன்றுவரையும் யாதும தடையின்றிக் கண்ணியமாகவும் அன்பாகவும் நேசமாகவும் பராமரித்து வந்த பிரித்தானிய அரசாங்கத்துக்கு நாங்களின்று நன்றியுடையவர்களாயிருக்கின்றோம்.

கனம்பொருந்திய ஐயா, இவ் வாஸ்பத்திரியில் சனங்கள் கூடுவதுங் குறைவதுமாகவிருந்து வந்தது. இப்போது எங்களுக்கு நல்ல காற்றுப் போதாதென்றும் இவ்விடத்தில் ஸ்தானம் கட்டக் கூடாதென்றும் சொல்லி, "தென்மாகாணமே உகந்த ஸ்தானமென்றும்" தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக ஆங்கில டைம்ஸ் பத்திரிகையில் காணப்பட்டது. அந்தோ! இது மிகவும் விசனமே. பிரதானமாய் ஸ்நானமில்லாவிட்டால் நாங்கள் மிகத் துர்க்கந்தமும் கஷ்டமுள்ளவர்களாய் இருப்போமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தங்களுக்கு விளங்கக்கூடுமன்றோ. களனியாற்றை நாங்கள் நோயாளிகளுக்குரிய ஒளஷதத்தைப் போலக் கருதிவருகின்றோம். களனியாறில்லாவிட்டால் குஷ்டரோகிகளைப் பார்க்க ஒருவரும் வரமாட்டார்கள் இவ்வாற்றைப்பற்றி விரிக்கப்புகின் மிக விரியும். சாதனமிடங்கொடாதென்று விடுத்தோம். கிற்க, ஐயாவே! வைத்தியக்காரர்களை கறுவாக்காட்டிலிருந்து அங்கொடைக்குக் கொண்டேகிய பின் எவ்வளவு பேர் இறந்தார்களென்று பிரதிநிதிகளுக்கே நன்கு தெரியக்கூடும். டக்ரர்மார் நல்ல சுவாசமுள்ள விடத்துக்குக் கொண்டுபோனால் இந்தப்பைத்தியகாரர்களுக்கிவ்விதமான துன்பமேற்பட்ட காரியம் யாதோ தெரியவில்லை. லோகோபகாரமாய் உழைக்கும் சனத்தலைவர்களே! தாங்களெங்கள் பேரில்இரக்கமுங் கருணையும் காட்டவேண்டும். இவ்வாஸ்பத்திரிக் கருகே கடற்காற்று உல்லாசமாயும் அருமையாயும் வீசிக்கொண்டேயிருக்கும். இவ்வாஸ்பத்திரியை விலக்கி பிறிதோரிடத்தில் அமைக்கப்போவதாய் வதந்தி உலாவுகின்றது. நாங்களிருக்கு மாஸ்பத்திரி யருகில் ஓரிடம் வாங்கத்துணிந்து அதைவிடுத்து இப்போது வேறோரிடம் வாங்கத் தீர்மானித்திருக்கிறார்கள். கவுன்சிலிலுள்ள சனத்தலைவர்களே, சற்றுலோசனை செய்து எங்களுக்காகப் பரிந்து பேசிக் கண்ணியப்படுத்தும்படியாய் மிகவும் தாழ்மையாகக் கேட்டுநிற்கின்றோம். ஈசன் தங்கள் யாபேருக்கும் கிருபைபுரிவாராக.

நோயாளிகளின் அனுமதிப்படி,
ப. பொன்னையா,
ம. சூசைப்பிள்ளை.

## அலைகளின் வலிமை.

"கடலிற் காற்றடிப்பதன்பயனாக மலைபோல் அலைகள் கிளம்புகின்றன" என்று சாதாரணமாய்க் கருதப்படுகிறது. ஆனால் உண்மையில் காற்றினால் உண்டாகும் அலைகள் நாம் நினைக்கும்வண்ணம் அவ்வளவு உயரம்கிளம்புவதில்லை. இந்திய சமுத்திரத்தின் தென்பகுதியில்தான் உலகிலேயே மிகப்பெரிய அலைகள் கிளம்புகின்றன. லெப்டினன்ட் பாரிஸ் என்பவர் அவ்விடத்தில் ஒரு பெருங் காற்று அடித்துக்கொண்டிருந்தபோது மிக நுட்பமாய் அளந்து பார்த்ததில் சராசரி அலைகள் 30 அடி உயம் எழும்பி விழுவதாகத் தெரியவந்தது. மிகப் பெரிய அலை 38 அடி உயரம் கிளம்பிற்று. இவை சமுத்திர மத்தியில் எழும்பும் அலைகள். கரையோரத்தில் அதிக ஆழமில்லாத இடங்களில் அலைகள் இன்னும் அதிக உயரம் கிளம்புகின்றன. பிஷப் ராக் என்னும் பாறையின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும் மிகப் பெரிய மணி, தண்ணீர் மட்டத்திற்குச் சரியாக 100 அடி உயரத்தில் இருக்கிறதாயினும் ஒருமுறை ஒரு பெரிய அலையினால் தாக்கப்பட்டுக் கட்டுத் தளர்ந்து போய்விட்டது. அயர்லாந்து தேசத்தின் மேற்குக் கடற்கரையில் அத்லாந்திக் சமுத்திரம் பலங்கொண்டு மோதுகிறது. இங்கே தண்ணீர்மட்டத்துக்கு 100 அடிக்கு மேலுள்ள குன்றுச்சிகளில் அலைகள் சமுத்திரத்தி னடியிலிருந்து கூழாங்கற்களைக் கொண்டுவந்து தள்ளுவதுண்டு. ஆனால் உண்மையில் கடல் அலைகளின் ஆங்காரத்தைக் காணவேண்டுமானால் பசிபிக் சமுத்திரத்திலுள்ள லாட்ஸ்வயிப் (Lots Wife) என்னும் தீவுக்கு நீங்கள் செல்லவேண்டும். இந்தக் கற்பாறையின் உச்சி தண்ணீர் மட்டத்துக்கு 350 அடி உயரத்தில் இருக்கிறதாயினும் அலைகள் இதன் உச்சிவரை எழும்பி முழுதும் நனைத்துவிடுகின்றன.

அலைகளின் தாக்கும்சக்தி அபரிமிதமானது. ஸ்கெர்ரிவோர் என்னுமிடத்திலுள்ள கலங்கரை விளக்கக் கட்டிடத்தில் ஒரு சதுரஅடிக்கு 6083 ராத்தல் கனத்துக்குச் சமமான சக்தியுடன் அலைகள் மோதுகின்றனவாம்.

பூகம்பங்கள் உண்டாகும்போதுதான் சமுத்திரத்தில் மிகப்பெரிய கொந்தளிப்புகள் உண்டாகின்றன. அத்லாந்திச் சமுத்திரத்தின் நடுவில் "அம்ப்ரியா" என்னும் கப்பலைத் தாக்கிய அலை இவ்வாறு ஏற்பட்டதாகவேஇருக்கவேண்டும். இது 50 அடி உயரத்துக்கு மேல் எழுந்ததாம். பூகம்பத்தினால் உண்டாகும் பேரலைகள் சிலசமையங்களில் கப்பல்களை அடித்துக்கொண்டுபோய் உள்நாட்டில்கரைதட்டும்படிவிட்டுவிட்டுத் திரும்புகின்றன. நாற்பது வருஷத்துக்கு முன் பேருநாட்டில் இத்தகைய அலை ஒன்று உண்டாயிற்று. லிஸ்பன் (போர்ச்சுகல்) நகருக்கருகில் உண்டான இத்தகைய அலை மற்றொன்றினால் சுமார் 40,000 ஜனங்கள் மாண்டனராம்.

கடலிற் பெருஞ் சுழல் காற்று அடிக்கும்போது சிலசமையங்களில்விஸ்தாரமானபேரலைகள் உண்டாகும். அப்போது சுழலின் மத்தியில் நீரின் மட்டம் சாதாரண நீர்மட்டத்தைவிட உயரமாகிறது. இதன்பயனாக ஒரு பெரும் புயல்அலை வெகு தூரத்திற்கு அடித்துக்கொண்டு போகிறது. 1876-ம் வருஷத்தில் இத்தகைய புயல்அலையொன்று கங்கை நதியின் முகத்துவாரப் பிரதேசம் முழுவதையும் மூழ்கடித்ததாம். அப்போது அப்பிரதேசம் முழுவதிலும் பத்து அடி முதல் 40 அடிவரை ஜலம் நின்றதென்று தெரிகிறது. நவசக்தி.

## தியாகமும் வெற்றியும்.

1. வெற்றி வேண்டாதார் யாவர்? நற்றுறையோ அல்லது கெட்டதுறையோ தாம் ஊக்கங்கொண்டுழைப்பதில் வெற்றியை யவாவுவார் வினையாளர். பேரியக்கங்கள் வெற்றியுற்றுத் திகழவே தொடங்கப்பட்டுள்ளன. ஆனால் வெற்றியுறுமா என்பது வேறு விஷயம். வெற்றியில் இன்பங் காணும் வீரர் ஒரு சிறந்த குணங்கொண்டிருக்கவேண்டும். யாண்டு வெற்றி திகழ்கின்றதோ ஆண்டு அத்தன்மையும் நிலவும். அற்றெனின் அத்தன்மைதான் யாது? அதுவே "தியாகம்" எனப்படுவது.

2. தியாகம் இன்றி வெற்றியுற்றோர் யாண்டும் இல்லை. என்றும் இருந்ததில்லை. இனி இருக்கப்போவதுமில்லை. வெற்றியின் இன்பந் துய்த்தல்வேண்டும் எனின் தியாகம் வேண்டும் எவ்விதமேனும் வெற்றியின் திறன் ஆதக. பொருண்முயற்சியில் வெற்றியாதல், தொழின்முயற்சியில் வெற்றியாதல், கல்விப்பேறில் வெற்றியாதல் ஏதேனும் தியாகமின்றிக் கைவரல் இயலாத தொன்றும்.

3. யாம் பெரும் பொருள் ஈட்டும் முயற்சியில் ஈடுபட்டோம் எனினும் ஆங்கும் ஒரு சிறு முதலைத் தியாகம் செய்தல் வேண்டும். உடல் வருத்தம் நோக்காது பாடுபடல்வேண்டும். நம்மிடையே நிலவும் சக்தியைத் தியாகம் செய்தல் வேண்டும். அற்றேல் வெற்றியுறும்.

4. பேரியக்கமென்று எழுவதெனின் தொண்டர்கள் தொண்டாற்ற முயல்கின்றனர். உடல் பொருள் ஆவி மூன்றையும் அவ்வியக்கத்தில் ஈடுபடுத்தி இன்பங்காணுகின்றனர் தேசத்தொண்டு, சமயத்தொண்டு, பாஷைத்தொண்டு ஆகிய உயர்வுசெறியும் தொண்டில் பெரும் அறிவுடையாரும் ஆற்றலுடையாரும் எல்லாவற்றையும் தியாகம்செய்தல்வேண்டும். தியாகம் எங்கு நிறைந்துறையுமோ ஆங்கெழும் வெற்றி. எத்தனை அறிவு ஞாயிறுகள் நமது மொழிவளம் படுத்தும் கழிபெருங் கலிப்பார்ந்த நற்றுறையிற் புக்கு உழைத்துளார்? அவர்தம் உயரிய தியாகமன்றோ இன்றளவும் நந்தாய்மொழியை உலவழக் கழிந்தொழிந்து சிதையாத சீரிழமைத்திறம் செறிய ஆக்கினது. மதம் இதம் பெறல் நாடி எத்துணைத் துறவோர், அறவோர் உயிர் உடல் ஆக்கம் ஆகியவைகளை த்யாகம் செய்துள்ளார்? அவர்தம் சீரும் சிறப்பும் ஒருந்திறத்ததோ? வாழ்நாள் முழுதும் தமது இனிய ஆரங்களின்வழி சைவசமயமெய்யத் திருவுளங்கொண்டு தம் வாழ்க்கையைத் தியாகம் செய்த திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆதிய குருவிமேல திருவுடையார்கள் கருணைத்திறம் ஓரளவினதோ.

5. நமது சமயம் தியாகத்தையே தனது அடிப்படை ஒழுக்கமாகக்கொண்டுளது. அதையே ஈகை, அறம், தானம், தர்மம் எனப் போற்றுகின்றது பண்டையோர் வாழ்வில் கண்டனர். தியாகம் வீட்டுக்குவீடுவெளித்திண்ணையும், ஊருக்கூர் சத்திரங்களும் மடங்களும் நிறைந்திருந்ததை நுனித்துணரின் பண்டைப் பெரியோர் தம் ஈகைச்சிறப்பும் தியாகத் திறனும் செவ்விதிற் புலனும்.

"அறத்தால் வருவதே இன்பம்" என்பது வெற்றியின் மாட்டுத் தியாகம் நிறைந்த ஆன்றோர் அனுபவம். இன்றும் தியாக உருவைக் கடவுளென வணங்குதல் கண்கூடு. எல்லாவற்றையும் அன்பர்களுக்குத் தியாகஞ் செய்யும் சிவபெருமான் தியாகராஜன் என அழைக்கப்படுகிறான். தியாகமூர்த்தியின் திருவருட்டியாகம் எத்தகைய பெருஞ் செயல் ஆக்குகின்றது.

6. இனி, எடுத்த காரியம் யாதிலும் வெற்றி அடுத்திடவேண்டும் எனில் தியாகம் ஆற்றல் வேண்டும் என்பது கண்டோம். பேரின்பநாட்டிற் செல்லவேண்டுமெனில், பரமாநந்தவெற்றி வேண்டுமெனில் ஆக்குக தியாகம். அர்ப்பணம் எனப்படுவதும் இதுவே. சரணாகதி, நமஸ்காரம் ஆகியனவெல்லாம், இறைவனிடம் எல்லாம் தியாகஞ் செய்யும் குறிப்பேயாம்.

"தன்னுமறியாமனது பலிகொடுத்தேன்"
(தாயுமானவர்.)

மனது பலிகொடுத்தது எற்றுக்கு. அது செய்யின் உற்றது இன்பம் என்பது கண்டார். மனத்தைத் தியாகஞ் செய்யும் அன்பர்கள் மலிந்தது நமது செந்தமிழ்நாடு.

'விடையேறியோர் அவெண்மதிசூடிக் காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளங் கவர்கள்வன்" என்ற தோணிபுரச் செம்மலின் தியாகம் ஓர்க. உள்ளம் பறிகொடுத்த அன்பர் உற்றது பேரின்பமன்றோ. அவ்வின்பம் உற்ற வெற்றியினும் மிக்கதொன்றுண்டோ. தனது மனதை இறைவனுக்காக்கி, எவ்விதமாம் பொருளும் அவற்கே ஆக்கிப் பெருந் தியாகம் செய்யும் அன்பு வேண்டும். அது இன்ப வெற்றி உய்க்கும்.

'தேடிய மாடுநீடு செல்வமும் இல்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்காவன'

என்ற திண்ணிய உள்ளத்த நாயனர் கொண்ட தியாகத்திறல் வேண்டும். அது வெற்றி ஆக்கும்.

'சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே நின்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனையமேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே'
—திருவாசகம்.

இத்திருப்பாட்டின் பொருள் நன்குணரற்பாலது. சிந்தனை, கண், வந்தனை வாக்கு ஆதியனவகளைத் தியாகம் செய்ததில் உற்ற வெற்றி இறைவனே தன்னைத் தந்தனன். இதுவன்றோ வெற்றி.

'அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை
எல்லாம், குன்றே யனையாய் எனையாட்கொண்
டபோதே கொண்டிலையோ'

என்று கூறும் பெருந்தியாகி, தாமுற்ற வெற்றியின் உயர்தகையால்

'இன்றோ ரிடையூறெனக்குண்டோ' என்றார்.

'எல்லா மறவென்னை யிழந்தநலம் சொல்லாய்
முருகா' —கந்தர் அனுபூதி.

தன்னையே யிழந்த தியாகி ஆனந்த வெற்றியின் அருமையில் அறைவது இது. வெற்றி வேண்டினோர் தியாகம் உறுதல் வேண்டும். தமது இலக்கை உற்று அவ்வெற்றியின் வின்புற வேண்டுவோர் தமக்குரியனயாவும் 'பலி' இடுதல் வேண்டும். அங்ஙனம் தியாகம் செய்வாரெனில் 'எடுத்த காரியம் யாதினும் வெற்றி' உறுவது முக்காலு முண்மையாம்

—கற்பகம்.

## அறிவித்தல்.

இதன்கீழ்க் கைக்கீறிடும் புங்குடுதீவு கிழக்கு நாகப்பர் ஐயம்பிள்ளையாகியநான் கைக்கீறுகாரனாயிருப்பதாலும்என துபெயருக்குமுடிந்திருந்த அறுதிஉறுதிகள் இற்றைக்கு ஏறக்குறைய ஒரு மாசத்துக்குள் களவுபோயிருப்பதினாலும் என் பெயரிலுள்ள ஆதனங்களை மறுபேர் நானேகைக்கீறிட்டதாக அறுதி ஈடு முதலிய எவ்வகையானசாதனங்களும் எந்தநொத்தாரிசு மூலமாவது சொல்லப்பட்ட ஒருமாசத்துக்குமுன் அல்லது பின் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அவைகள் பொய்யானவைகளாகும் என்பதை இத்தாலறிவிக்கின்றேன்.

புன். கிழக்கு,
29 5 23. நா. ஐயம்பிள்ளை கைக்கீறு.

(Mis 870)

## காணி விற்பனவு விளம்பரம்.

பழையிலுள்ள வெட்டுக்காடெனப்படுந் தென்னந் தோட்டம் விற்பனைக்கிருக்கின்றது. இது 180 ஏக்கர் கொண்டது. பழைப்புகைரதஸ்தானத்திலிருந்து 2. மயில் தூரத்தில் யாழ்ப்பாணம் கண்டிரோட்டிற்குச்சமீபமாக இருக்கின்றது, இதற்குட் கல்வீடொன்று உண்டு, தோட்டத்திற்குச் செல்வதற்குப் பெரிய தெருவிலிருந்து போகும் ஒருகுறுக்குத்தெருவுண்டு, மற்றும் விபரங்கள் அறியவேண்டில், பிறக்ரர். ஸ்ரீ. M .C. துரைரத்தினம் அவர்களிடத்தும் அறிந்துகொள்ளலாகும்.

(M. 47.) V. சண்முகலிங்கம்.

பிரபரூத சுதந்திற்த திவ்விய ஒளஷதம்! — 2 மணிநேரத்தில் அபூர்வதனம்!!

இந்த மருந்து இராத்திரிவேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப்போயிருந்தாலும் அதைக் கெட்டிப்படுத்தி 2 மணிநேரத்துக்குள் அதிகமான ரதி சக்தியைக் கொடுக்கும்.

மூன்று நாள் சாப்பிட்டால் வீர்ய நஷ்டம் எவ்வளவு சீலமாக இருந்தபோதிலும் அதைத் தவறாமல் கட்டுப்படுத்தும். இரண்டு புட்டிகள் சாப்பிட்டால் தாதுநாசத்தினால் உண்டாகும் நபும்ஸகத்வம் போக்கி நரம்புகளுக்கு அதிக பலத்தைக்கொடுத்து அதிகமான யௌவனத்தைக் கொடுக்கும். ஒருமுறை தருவித்து உபயோகித்தால் இதன் குணம் தங்களுக்கே தெரியவரும். கடிதங்கள் ரகஸியமாய் வைக்கப்படும்.

20 மாத்திரைகள் கொண்ட சீசா 1-க்கு ரூபா 2—0—0 வி. பி. தபாற் சார்ஜ் வேறு.

ஏஜென்ட்: பீ. வி. கண்ணன் அன் கோ.
சைதாப்பேட்டை (இ. கா.) மதாரஸ்.

(Y. 55 B)

## விளம்பரம்.

பாலைமரங்களும், தீராந்திகளும், முதிரை மரங்களும், தீராந்திகளும், பலகைகளும், கருங்காலி மரங்களும பனைமரங்களும், சிலாகைகளும் தேவைக்குத் தக்கபடி விற்பனைக்கிருக்கின்றது. ஆடர்களுக்கும் கொடுக்கப்படும்.


யாழ்ப்பாணம், ச. கந்தையாபிள்ளை,
17—12—25. உவைமன் றோட்டு,
(Y. 49) நல்லூர்.

## இரவில் மணிபார்க்கும் ரேடியம்.

18 காரட் ரோல்ட் கோல்ட் பொன் டயல்.

8 மூலைக் கெடியாரங்களில் இதுதான் முதற்றரமான கைசிற்கட்டும்கெடியாரம் No. 105.

இரவில் மணிபார்ப்பதற்கு இக்கெடிகாரத்திற்கு விளக்கு வெளிச்சம் வேண்டியதில்லை.



இதில் ரேடியம் என்னும் ஓர்வித வஸ்துவை நெம்பர்களிலும் முட்களிலும் சேர்ந்திருப்பதால் இரவில் மணி நன்றாய்த்தெரியும். இருட்டு எவ்வளவு கருக்காய் இருக்குமோ அவ்வளவிற்கும் எண்கள் சூரிய வெளிச்சத்தைப்போல் பிரகாசிக்கும். இது வெகுகாலம் வரை நன்றாய்ப் போகக்கூடியது. உத்த சாமான்களால் தயாரிக்கப்பட்டது. இது சரியான டைம் காட்டக்கூடியது. இதை பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். வெகு அழகாயிருக்கும்.

டை 18 காரட் ரோல்ட் கோல்ட் பிளேட் இரவில் மணிகாட்டும் கெடியாரம் முன்விலை ரூபா 15-0-0. தற்சமயம் குறைந்தவிலை ரூபா 7-8-0. ரேடியம் இல்லாதது 6-8-0.

No. 110. 5 வருடம் காரண்டியமுள்ள ரோல்ட் கோல்ட் பிளேட் பொன் கெடியாரம் விலை ரூபா 10-0-0. ரேடியம் உள்ளது 11-0-0

விலாசம்: ரேடியோ வாச்கம்பெனி,
போஸ்ட்பாக்ஸ் நம்பர் 142, மதராஸ்.

(Y. 53.)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாளு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீங்கி தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா க0. கால் ரூத்தலுக்கு ரூபா ரு தாபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொலைவாயிராச்சியப்பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
ச. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டுக்களப்பு,
(M. 36.) சிலோன்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதிவிளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan, for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.